வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4380 /ஆ4/2025 நாள்: 27.05.2026

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச்/ஏப்ரல்–2026 பள்ளி மாணவர்கள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழில் (provisional mark certificate )திருத்தங்கள் மேற்கொள்ள கடைசி வாய்ப்பு வழங்குதல் –தொடர்பாக

பார்வை : சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.013061/பி.1/2025 நாள் 27.05.2026

===============

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதங்களுக்கிணங்க நடைபெற்று முடிந்த மார்ச்/ஏப்ரல் 2026 . பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழில்(provisional mark certificate ) தேர்வர்களது (தலைப்பெழுத்து பெயர் (ஆங்கிலம் / தமிழ்), தாய் மற்றும் தந்தை பெயர், பிறந்ததேதி, புகைப்படம் பயிற்றுமொழி (Medium of Instructions) ஆகியவற்றில் உள்ள திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி இருப்பின், தலைமை ஆசிரியர்/மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் மாணவ /மாணவியின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் நகலில் திருத்தங்கள் இருப்பின் உரிய திருத்தங்களை மேற்கொண்டு. சான்றொப்பமிட்டு அதனை வேலூர், கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 03.06.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேர்வர்களது நலன் கருதி பிழைகளற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சிடுவதற்காக வழங்கப்படும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளாமல் மதிப்பெண் சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்பட்ட பிறகு, சான்றிதழில் திருத்தம் செய்யக் கோரி முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு மனுக்கள் அனுப்புதல் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து வகை உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் இப்பணிக்கு அதிமுக்கியத்துவம் அளித்து. உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்//
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.